

திருச்சியில் நடந்த மாசில்லா தமிழ்நாடு மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டத்தில் மாணவிகளுக்கு அமைச்சர் கருப்பணன் துணி பைகளை வழங்கிய போது எடுத்த படம். அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி, கலெக்டர்கள் சாந்தா (பெரம்பலூர்), சுரேஷ்குமார் (நாகப்பட்டினம்), விஜயலட்சுமி (அரியலூர்), நிர்மல்ராஜ் (திருவாரூர்), அண்ணாதுரை(தஞ்சாவூர்) மற்றும் பலர் அருகில் உள்ளனர்.

### ஜனவரி 1-ந் தேதி முதல் அமல்:

# தடையை மீறி பிளாஸ்டிக் பயன்பாடு கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை

## அமைச்சர் கே.சி.கருப்பணன் எச்சரிக்கை

திருச்சி, டிச.22-

ஜனவரி 1-ந் தேதி முதல் அமலுக்கு வருவதால், தடையை மீறி பிளாஸ்டிக் பயன்பாடு கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.சி.கருப்பணன் எச்சரித்தார்.

### விழிப்புணர்வு கூட்டம்

தமிழ்நாட்டில் வருகிற 1-ந் தேதி முதல் ஒருமுறை பயன்படுத்தி விட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. இது தொடர்பாக மண்டல வாரியாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அரசுடன் இணைந்து 'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு' என்ற விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தி வருகிறது. திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம் நேற்று திருச்சியில் ஒரு ஓட்டலில் நடந்தது.

### 3 அமைச்சர்கள் பங்கேற்பு

நிகழ்ச்சிக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் தலைமை தாங்கி பேசினார். திருச்சி மாவட்ட வருவாய் அதிகாரி சாந்தி வரவேற்று பேசினார். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் என்.வளர்மதி பேசினார்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் கலந்து கொண்டு, பிளாஸ்டிக் தடை

கோவை உள்ளிட்ட இடங்களில் சாயப்பட்டறைகள் அதிகம் உள்ளன. சாயத்திற்கு ரசாயனம் சேர்க்கப்படுகிறது. எனவே, சாயக்கழிவுகளை சுத்தப்படுத்தும் வகையில் கடந்த 2011-ம் ஆண்டு ரூ.200 கோடிக்கு வட்டியில்லா கடன் உதவியை மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா வழங்கினார். இதனால் கழிவுநீர் ஆற்றில் கலப்பது தடுக்கப்பட்டது. திருப்பூரில் பயன்படுத்தப்படும் தண்ணீரில் அமில-கார அளவு 12 ஆயிரம் முதல் 14 ஆயிரம் புள்ளிகள் வரை இருந்தது. அந்த நிலை மாற்றி அமைக்கப்பட்டு தற்போது 6 ஆயிரம் புள்ளிகள் அளவுக்கு குறைக்கப்பட்டது. தற்போது 95 சதவீதம் சுத்தமான தண்ணீர் வழங்கி வருகிறோம்.

### சவாலான திடக்கழிவு

ஒருமுறை பயன்படுத்தி விட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. திருச்சியை பொறுத்தவரையில் ஒரு நாளுக்கு 500 டன் திடக்கழிவுகள் அகற்றப்படுகின்றன. சென்னையை பொறுத்தவரை தினமும் 5 ஆயிரம் டன் திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகின்றன. இன்றைக்கு திடக்கழிவுகள் நமக்கு பெரிய சவாலாக இருக்கிறது. எனவே, அதையும் நாம் சுத்தப்படுத்தி ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அதற்கு மாற்றுவழியை கண்டறிய ஓராண்டு காலமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். ஜப்

போட்டு கொடுக்கும் நிலை தான் உள்ளது. இதனால், அதன் சுவை, குணம் மாறி விடுகிறது. இதனால், புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் வரவும் வாய்ப்பு உள்ளது. கால்நடைகள் சாலையோரம் உள்ள பிளாஸ்டிக்கை தின்று இறந்துபோகும் நிலை உள்ளது.

### கடும் நடவடிக்கை

தமிழகத்தில் பிளாஸ்டிக் தடை விதிக்கப்படும் என கடந்த 5.6.2018 அன்று சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். ஆனால், இதுவரை யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நல்ல ஆதரவு உள்ளது. அரசு அலுவலகங்களிலேயே 60 சதவீதம் பிளாஸ்டிக் தவிர்க்கப்பட்டு விட்டது. எனவே, பிளாஸ்டிக் தடை சட்டம் நிறைவேற்றுவதில் எந்தவித பாதிப்பும் இருக்காது.

ஜவுளிக்கடையில் கொடுக்கும் 'பிக்ஷாப்' பை உள்ளிட்டவைக்கு தடை கிடையாது. கிட்டத்தட்ட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்குத்தான் தடை விதிக்கப்படுகிறது. இதனால், ஆலை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அங்கு மாற்றுப்பொருள் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஜனவரி 1-ந் தேதி முதல் குறிப்பிட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை அமலுக்கு வருகிறது. அதையும் மீறி யாராவது பயன்பாடு செய்வது கண்டறியப்பட்டால் நடவடிக்கை கடுமையாக இருக்கும். அது தொடர்பாக அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### 5 மாவட்ட கலெக்டர்கள்

கூட்டத்தில் கலெக்டர்கள் அண்ணாதுரை (தஞ்சை), விஜயலட்சுமி (அரியலூர்), நிர்மல்ராஜ் (திருவாரூர்), சுரேஷ்குமார் (நாகை), சாந்தா (பெரம்பலூர்) ஆகியோர் கலந்து கொண்டு தங்களது மாவட்டங்களில் பிளாஸ்டிக் ஒழிப்புக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்து பேசினார்.

இதில் மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. பரமேஸ்வரி, ஆவின் தலைவர் (திருச்சி) கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலாளர் சேகர் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




